IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No.117 /2024

dated : 02.07.2025

P.W.1

Name மணிவண்ணன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

எனக்கு இரண்டு மகன்கள். 15.07.2014 ல் என் மனைவியிடமிருந்து பிரதிவாதி ரூ. 4,50,000/- பெற்றுக் கொண்டதாக கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். அதே ஆண்டில் மேலும் ரூ. 25000/- பெற்றுக் கொண்டதாகவும் கூறியிருக்றேன். மேலும் 26.08.2014 ல் ரூ.6 லட்சம் பெற்றுக் கொண்டதாகவும் கூறியிருக்கிறேன். மேலும் ரூ.15 லட்சம் ரொக்கமாக பெற்றுக் கொண்டதாக கூறியிருக்கிறேன் தேதி கூறவில்லை என்றால் சரிதான். எந்த ஆண்டு என்றும் எனக்கு தெரியவில்லை. என் மனைவி இறப்பதற்கு 6 ஆண்டுகளுக்கு முன்பாக அவ்வாறு ரூ15 லட்சம் கொடுத்துள்ளார். அவ்வாறு பணம் கொடுத்ததற்கு ஆவணங்கள் ஏதும் இல்லை. 11.06.2020 அன்று என் மனைவி இறந்துபோனார். 2015 ம் ஆண்டுக்கு முன்பு என் மனைவி கொடுத்த தொகைக்காக நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தொகை கோரும் காலவரம்பு கடந்துவிட்டது என்றும் சட்டப்படி என் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. 2022 ம் ஆண்டில் நான்

தென்காசி காவல் ஆய்வாளர் விசாரணையின் மூலம் ரூ.4 லட்சம் பெற்றுக் கொண்டேன். பிரதிவாதியின் பெயரில் எனக்கு தொகை வரப்பெற வேண்டி எந்த குற்ற வழக்கும் இல்லை என்றால் சரிதான். என் மனைவியின் தொகைதான் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டிருந்தது. என் மனைவியின் வாரிசு என்ற முறையில்தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கிற்கு முன்பாக என் மனைவியின் அசையும், அசையா சொத்துக்களை பொறுத்து நீதிமன்றத்தின்மூலம் வாரிசுரிமைச் சான்று பெறவில்லை என்றால் சரிதான். என் மனைவிக்கு இரண்டு குழந்தைகளும் வாரிசுகள் என்ற முறையில் அவர்களை வழக்கின் தரப்பினர்களாக குறிப்பிடாமல் நான் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.07.02 18:12:56 +0530